# රාජ්‍ය ගිණුම් දෙපාර්තමේන්තුව
# அரச கணக்குகள் திணைக்களம்
# Department of State Accounts

මගේ අංකය / எனது இல. / My No. SA/GFS/01/01/08 – Volume II   ඔබේ අංකය / உமது இல. / Your No.   දිනය / திகதி / Date 2021.07. 26


அமைச்சுக்களின் செயலாளர்கள்,
இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்,
மாவட்ட செயலாளர்கள்,
திணைக்களங்களின் தலைவர்கள் யாவருக்கும்,

**அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதியை கணக்கு வைத்தலும் சீராக்கம் செய்தலும்**

அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துகளை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கும் நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் ஏற்கனவே பெரும்பாலான அமைச்சுக்களும் திணைக்களங்களும் அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு இசைவாகியுள்ள போதிலும், இதுவரை அந்த நிகழ்ச்சித்திட்டத்திற்கு முறையாக இசைவாகாத நிறுவனங்களும் உள்ளன. அரசாங்கத்தின் இறுதியான நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கும் போது இந்த நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதிகள் எடுத்துக் காட்டப்படுகின்றபடியினால் சரியான விதத்தில் அந்த தகவல்களை பேணி வருவதற்காக சகல அரசாங்க நிறுவனங்களும் முன்னுரிமை வழங்க வேண்டிய அதேவேளையில் கணக்குகளின் உண்மைத்தன்மையை பேணி வருவதும் தொடர்புடைய நிறுவனங்களின் பொறுப்பாகும். கணக்குகள் சரியான பெறுமதியை பேணி வராததன் காரணமாக இறுதி கணக்கில் காட்டப்படுகின்ற பெறுமதி பற்றி கணக்காய்வாளர் அதிபதியினால் விசாரணை செய்யப்பட்டுள்ளது. அதனால் நிதி அல்லாத சொத்துக்களின் பெறுமதியை சரியாகப் பேணி வருவதற்காக கீழே குறிப்பிடப்பட்டுள்ள அறிவுரைகளை பின்பற்றுமாறு தயவாய் கேட்டுக்கொள்கிறேன்.

02. நிதி அல்லாத சொத்துக்களின் கணக்குரீதியான செம்மைத்தன்மையை பேணுவதற்காக தங்களது நிறுவனத்தின் (அமைச்சுக்கள் / திணைக்களங்கள்) புத்தக மீதிகளை, எப்போதும் திறைசேரியின் அச்சு குறிப்புகளில் உள்ள மீதிகளுடனும் (சொத்து பேரேட்டு மீதிகள்) CIGAS web interface ஊடாக பதிவேற்றம் செய்யப்படுகின்ற தனிச் சொத்து மீதிகளுடனும் (சொத்துக்களின் அறிக்கையில் உள்ள மீதிகள்) சமமாக இருத்தல் வேண்டும். இது சம்பந்தமாக அரச கணக்குகள் திணைக்களத்தினால் அடிக்கடி ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ள அதேவேளையில் 2021.02.02 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டுள்ள அரச கணக்குகள் வழிகாட்டு இலக்கம் 1 இல் காட்டப்பட்டுள்ளவாறு New CIGAS நிகழ்ச்சித் திட்டத்திற்கு அன்றாடம் சேர்க்கப்படுகின்ற தகவல்களை நாளாந்தம் பரிசீலனை செய்து சரியான தகவல்களை மாத்திரம் அனுப்புவதற்கு கவனம் செலுத்துதல் வேண்டும்.

03. அதன் பிரகாரம், CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் சொத்துக்களை கணக்கு வைக்கும்போது சொத்துக்களின் பேரேட்டு பட்டியலின் (Asset Ledger - திறைசேரி அச்சுக் குறிப்புகள்) மீதிகள் மற்றும் சொத்து அறிக்கையில் (CIGAS web interface இனால் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ள தனி சொத்துக்கள) காட்டப்பட்டுள்ள மீதிகள் ஒன்றுக்கொன்று சமமாக இருக்கவேண்டிய போதிலும் பல நிறுவனங்களில் இந்த மீதிகளுக்கிடையில் வேறுபாடுகள் காணப்படுவதாக CIGAS நிகழ்ச்சித் திட்டத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ள தகவல்களை பரிசீலனை செய்யும்போது அவதானிக்கப்பட்டுள்ளது.

04. அதனால் தங்களது தலைப்பின் கீழ் வருகின்ற CIGAS நிகழ்ச்சித்திட்டத்தின் சொத்துக்கள் பேரேட்டு பட்டியலிலும் (திறைசேரி அச்சு குறிப்புகள்) சொத்துக்களின் அறிக்கைகளில் (CIGAS web interface இல் பதிவேற்றி உள்ள தகவல்கள்) மீதிகளை பரிசீலனை செய்து 2021.07.31 ஆம் திகதியில் உள்ளவாறு சீராக்கம் செய்து இத்துடன் இணைக்கப்பட்டுள்ள மாதிரிப் படிவத்தின் பிரகாரம் gfs.sad.treasury@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரியினூடாக இந்தத் திணைக்களத்திற்கு அறிக்கையிடுமாறு தயவாய் கேட்டுக்கொள்கிறேன். (இந்த மாதிரி படிவத்தை www.treasury.gov.lk இணையத்தளத்தினூடாக பதிவிறக்கம் செய்துகொள்ள முடியும்.

05. இதற்குப் பின்னர் தங்களது நிறுவனத்தில் கணக்கு வைக்கப்பட்டுள்ள சொத்துக்களின் பெறுமதி பற்றிய சிறந்த முறையில் பரிசீலனை செய்து பார்க்குமாறும், அந்தப் பெறுமதியை மாதாந்த கணக்கு சுருக்கத்தை அனுப்புவதற்கு முன்னர் மாதாந்தம் சீராக்கம் செய்து அரச கணக்குகள் திணைக்களத்திற்கு அறிக்கையிடுமாறும், அதில் ஏதேனும் தொழில்நுட்ப ஒத்துழைப்புகள் தேவைப்படுமாயின் இந்த திணைக்களத்தின் தொகுதி அபிவிருத்தி மற்றும் பயிற்சி பிரிவின் பணிப்பாளரை (தொ.பே. 011-2484826) தொடர்பு கொள்ளுமாறும் தயவாய் கேட்டுக்கொள்கிறேன்.

06. மேலும், மதிப்பீட்டு திணைக்களத்தினால் மதிப்பீடு செய்யப்பட்டு அறிக்கையிடப்பட்டுள்ள காணி மற்றும் கட்டிடங்களின் பெறுமதியை சரியாக CIGAS நிகழ்ச்சித் திட்டத்தினூடாக கணக்கு வைக்குமாறும் மதிப்பீடு செய்யப்பட்டுள்ள காணி மற்றும் கட்டடங்களுக்கு மேலதிகமாக மேலும் தங்களது நிறுவனத்திற்கு சொந்தமான மதிப்பீடு செய்ய வேண்டிய காணி மற்றும் கட்டடங்கள் இருக்குமாயின், அவற்றையும் மதிப்பீட்டு திணைக்களத்தின் மூலம் மதிப்பீடு செய்து கணக்கு வைப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் மேலும் கேட்டுக்கொள்கிறேன்.

07. அதேபோன்று, அரசாங்கத்தின் காணி மற்றும் கட்டடங்களை மதிப்பீடு செய்து கணக்கு வைக்கும் நடவடிக்கைகளுக்காக இதுவரை தங்களது நிறுவனத்திடமிருந்து கிடைத்த அளவில்லாத ஒத்துழைப்புக்கு நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்ற அதேவேளையில், அரசாங்கத்தின் நிதி அல்லாத சொத்துக்களை கணக்கு வைப்பதனை முன்னுரிமைப் பணியாகக் கருதி தேவையான நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறும் தயவாய் கேட்டுக்கொள்கிறேன்.

ஒப்பம்: டபிள்யு.ஏ சமந்த உபனந்த
பணிப்பாளர் நாயகம்

பிரதி: கணக்காய்வாளர் அதிபதி, தேசிய கணக்காய்வு அலுவலகம்

**CIGAS වැඩසටහනෙහි මූල්‍ය නොවන වත්කම් වටිනාකම් සැසඳීම (2021.07.31 දිනට)**
(Reconciliation of Non-financial Asset Balances in CIGAS at 31st July 2021)

ශීර්ෂ අංකය :
(Head No.)

ආයතනයේ නම :
(Name of the Institute)

| | | 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| වත්කම් කේතය | විස්තරය | දෙපාර්තමේන්තු පොත් අනුව ශේෂය (රු.) | භාණ්ඩාගාර මුද්‍රිත සටහන් අනුව ශේෂය (වත්කම් ලෙජරය) (රු.) | **CIGAS web interface** වෙතින් උඩුගතකර ඇති කේවල වත්කම් ශේෂය (වත්කම් වාර්තාව) (රු.) | තීරු අංක 1 හා 2 අතර වෙනස | තීරු අංක 1 හා 3 අතර වෙනස | තීරු අංක 2 හා 3 අතර වෙනස | වෙනසක් පවතී නම් ඊට හේතු | වෙනස නිවැරදි කිරීමට ගෙන ඇති ක්‍රියාමාර්ග |
| Asset Code | Description | Balance according to the Department's books (Rs.) | Balance according to the Treasury prinouts (Asset Ledger) (Rs.) | Individual Balance uploaded through CIGAS web interface (Asset Report-BOS) (Rs.) | Differenc e between column 1 & 2 | Differenc e between column 1 & 3 | Difference between column 2 & 3 | Reasons for Differenc e | taken actions for correct differences |
| 9151 | ගොඩනැගිලි හා ඉදිකිරීම් (Buildings & Structures) | | | | | | | * | * |
| 9152 | යන්ත්‍රසූත්‍ර හා කාර්යාල උපකරණ (Machinery & Equipments) | | | | | | | | |
| 9153 | ඉඩම් (Lands) | | | | | | | | |
| 9154 | අස්පෘෂ වත්කම් (Intangible Assets) | | | | | | | | |
| 9155 | ජීවවිද්‍යාත්මක වත්කම් (Biological Assets) | | | | | | | | |
| 9160 | කෙරී ගෙන යන වැඩ (WIP of Buildings & Structures) | | | | | | | | |
| 9180 | කල්බදු වත්කම් (Lease Assets) | | | | | | | | |
| | | | | | | | | | |

* 7 හා 8 තීරු සඳහා වෙන වෙනම හේතු දක්වන්න
(* Give separate reasons for columns 7 and 8)